**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**நாள். 21.01.2026.**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 53/2019**

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் நாள் புதன்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சண்முகம் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | முருகேசன் | வயது | : | 70 |
| ஊர் | : | உக்கல் | தொழில் | : | கூலி |

**பி.வா.சா. 2 (சண்முகம்): பிரதிவாதி தரப்பு சாட்சியின் முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் **பிரதிவாதி தரப்பு சாட்சி (பி.வா.சா.2) ஆவேன்.** எனது வாக்கு மூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். இதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். இதில் உள்ள சங்கதிகளை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

எனக்கு என்ன வயது என்றால் 70 வயதாகிறது. நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். என்னிடம் கையொப்பம் பெற்ற பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துதான் கையொப்பம் இட்டேன். பிரதிவாதி லட்சுமி என்பவர் எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால் என்னுடைய பங்காளியான தம்பியின் மனைவி ஆவார். தாவா சொத்து என்ன சர்வே எண்ணிலும் எவ்வளவு விஸ்தீரணம் கொண்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து என்று பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது எந்த சொத்து என்று தெரியாது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கை யார் தாக்கல் செய்தது என்றால் லட்சுமி என்பவர் தாக்கல் செய்தார். மேற்படி லட்சுமி அம்மாள் தாக்கல்செய்த வழக்கின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் வீட்டு மனைக்காக வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் எவ்வளவு வருடங்களாக வசிக்கிறேன் என்றால் எனக்கு பூர்வீகமே

மேற்படி கிராமம்தான். 2000ம் வருடத்தில் என் கிராமத்தில் சுமார் 63 பேருக்கு பட்டா கொடுக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி 63 பேருக்கு பட்டா கொடுக்கப்பட்ட இடத்தில் வழக்கு சொத்தும் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி 63 பேருக்கு பட்டா கொடுக்கப்பட்டதை எதிர்த்து வழக்கு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. 2000ம் ஆண்டில் வீட்டு மனை ஒப்படைவு தவறுதலாக வழங்கப்பட்டுள்ளது என்று பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஆவணம் ஏதேனும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி லட்சுமி என்பவர் வீட்டு மனை ரசீதும், குடிநீர் இணைப்பு ரசீது, மின்கட்டண ரசீது ஆகியவைகளை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி ரசீதுகளை நான் எப்போது பார்த்தேன் என்றால் நான்தான் வாங்கிக்கொண்டு வருவேன். மேற்படி தகவல்களை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி லட்சுமி என்னுடைய நெருங்கிய உறவினர் என்பதால் நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பாா்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.01.21 15:50:41 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
செய்யாறு